# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 14.9.2012

''பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த'' தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி, ''முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும்'' விதமாக, வழக்கறிஞர்களுக்கான சேமநல நிதியை 5 லட்சம் ரூபாயாக தனது ஆட்சிக் காலத்திலேயே உயர்த்தி விட்டதாக இந்தியக் குடியரசுத் தலைவர், தமிழ்நாடு ஆளுநர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் திரு. டி.கே.எஸ். இளங்கோவன் மூலம் கடிதங்களை அனுப்பி தனது ஆற்றாமையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

மேற்படி கடிதத்தில், இந்தியக் குடியரசுத் தலைவர், தமிழக ஆளுநர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், ஆகியோர் முன்னிலையில் நான் பொய்யான அறிவிப்பை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்வதோடு, இது குறித்த உண்மை நிலைமை வழக்கறிஞர்களுக்கு தெரிந்து இருந்தாலும், தமிழக மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது எனது கடமை என கருதுகிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதல்வராக இருந்த திரு. கருணாநிதி, 25.4.2010 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின் போது, வழக்கறிஞர்களுக்கான சேமநல நிதியை 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தும்படி சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் வைத்த கோரிக்கையை தான் நிறைவேற்றப் போவதாகவும், ஆனால் சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அது பற்றி தனது கருத்தை அப்போது வெளியிடாமல், வெளியிட வேண்டிய நேரத்தில் இது குறித்த அறிக்கையை வெளியிடுவதாகவும் தெரிவித்துவிட்டு, ஆட்சி முடிவடையும் தருணத்தில், சட்டம் தெரிந்தவர்களையே ஏமாற்றும் விதமாக, காலஞ்சென்ற வழக்கறிஞர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை, நல நிதியில் பதிவு செய்த காலத்தின் அடிப்படையில், 3 லட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபாய் வரை வழங்க வகை செய்து 24.2.2011 அன்று ஓர் ஆணையை பிறப்பித்தார். அந்த ஆணையில் நிதி ஒதுக்கம் பற்றி எந்தக் குறிப்புமே இல்லாததால், செயல்படுத்தப்பட வேண்டாம் என்ற எண்ணத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணை இது என்றே தோன்றுகிறது. இதனைத் தொடர்ந்து 25.2.2011 அன்று இதற்கான செய்திக் குறிப்பும் வெளியிடப்பட்டது. மேற்படி ஆணையில், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து 15 ஆண்டுகளுக்குள் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு மூன்று லட்சம் ரூபாயும்; 15 ஆண்டுகளுக்கு மேல் 20 ஆண்டுகளுக்குள் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு மூன்று லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்; 20 ஆண்டுகளுக்கு மேல் 25 ஆண்டுகளுக்குள் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு நான்கு லட்சம் ரூபாயும்; 25 ஆண்டுகளுக்கு மேல் 30 ஆண்டுகளுக்குள் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்; 30 ஆண்டுகளுக்கு மேல் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட இந்த ஆணை செயல்படுத்தப்பட வேண்டும் என்றால் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். அப்பொழுது தான் இந்த ஆணைக்கு செயல்வடிவம் கொடுக்க முடியும்.

ஆனால், இந்த ஆணை வெளியிடப்பட்ட உடனேயே, இதனால் வழக்கறிஞர்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதால், இதனை திரும்பப் பெறுமாறு வலியுறுத்தி தஞ்சாவூர் பார் அசோசியேஷன், கோயம்புத்தூர் பார் அசோசியேஷன் ஆகியவை தீர்மானங்களை நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பி இருந்தன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ்நாடு பார் கவுன்சிலும் இதை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு 16.8.2011 அன்று தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், வழக்கறிஞர்கள் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு வெத்துவேட்டு ஆணையை திரு. கருணாநிதி தலைமையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு பிறப்பித்தது.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெளியிடப்பட்ட அரசாணைக்கு ஒரு வேளை சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு அது அமல்படுத்தப்பட்டிருந்தாலும், இந்தத் திட்டத்தில் 1991–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் தான் வழக்கறிஞர்கள் பதிவு செய்து கொண்டுள்ளதால், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பிறகு இறந்தால் தான் அவர்களது குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் கிடைக்கும் என்பது தான் நிதர்சனமான உண்மை. இந்த அரசாணையின் மூலம் வழக்கறிஞர் ஒருவரும் பயனடையவில்லை. தனது ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட அரசாணை மூலம் யார் பயனடைந்தார்கள் என்பதை தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியால் சுட்டிக்காட்ட முடியுமா?

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு வெளியிட்ட அரசாணையில் உள்ள குறைகளையும், குளறுபடிகளையும், ஏமாற்று வித்தைகளையும் முற்றிலுமாக களைந்து, வழக்கறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு செய்த காலத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக உள்ள வழக்கறிஞர்கள் இறந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்றும், இதற்காக ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிக்கு 4 கோடி ரூபாய் வரை மானியம் வழங்கப்படும் என்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் 150–வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு நான் அறிவித்தேன். தற்போது, தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் 2 லட்சம் ரூபாயை 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி நான் அறிவித்ததில் எந்தவித பொய்மையும் இல்லை.

சென்னை உயர் நீதிமன்றத்தின் 150–வது ஆண்டு விழாவில் நான் வெளியிட்ட அறிவிப்பினை அனைத்து வழக்கறிஞர்களும் பாராட்டி வரவேற்றதை கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத திரு. கருணாநிதி, பொறாமையின் காரணமாக, வயிற்றெரிச்சலின் காரணமாக, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர், தமிழக ஆளுநர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு உண்மைக்கு முற்றிலும் புறம்பான தகவலை அளித்துள்ளார். அதாவது, வழக்கறிஞர்களை ஏமாற்றியது போதாது என்று, சென்னை உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும், தமிழக ஆளுநரையும், இந்தியக் குடியரசுத் தலைவரையும் திரு. இளங்கோவன் மூலம் ஏமாற்ற முனைந்திருக்கிறார் திரு. கருணாநிதி.

திரு. கருணாநிதியின் இந்தச் செயலுக்கு எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு, திரு. இளங்கோவனால் அனுப்பப்பட்ட அவதூறு கடிதத்தினை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**